# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

உலக வாழ்வு துன்பங்கள் நிறைந்ததென்று நாம் நினைக்கிறோம், சொல்லிக் கொள்கிறோம். ஆனால் எவ்வளவு துர்பாக்யசாலிக்கும் பகவான் பூமியில் வெறும் துன்பம் மட்டுமே தருவதில்லை. உணவு, உடை, ஓய்வு, தூக்கம், சிரிப்பு, பொழுதுபோக்கு என்று பல ஆறுதல்களையும் நிம்மதி வாய்ப்புக்களையும் கலந்து கலந்து தான் கொடுக்கிறான். நான் சொல்வது பிச்சைக்காரனுக்கும் குஷ்டரோகிக்கும், கடனாளிக்கும், சிறையில் வாடுபவனுக்கும், குடும்பத் தொல்லைகளில் சிக்கித் தவிப்பவனுக்கும் கூட பொருந்தும். ஆனால் அவர்கள் அதை உணருவதில்லை. தம் துன்பத்தை மட்டுமே பெரிது படுத்திப் பார்த்து பேசிக் காட்டுவார்கள். அவர்கள் மட்டும் என்ன! நாமும் கூட அப்படித்தான். “என் வாழ்க்கையே ஒரு கண்ணீர் வாழ்க்கை” என்று புலம்புவோம். ஆனால் உண்மையில் ‘கண்ணீர் வாழ்க்கை’ ‘கதறல் வாழ்க்கை’ என்பது வேறொரு இடத்தில் இருக்கிறது அதுதான் நரகம்.

நரகத்துக்குப் போனால்தான் பூமியில் கண்ணீர் வாழ்க்கை வாழ்ந்ததாக சொல்லிக் கொள்வோர் கூட பூமி ஒரு சொர்க்கம் என்பதை உணர்வார்கள். நரகம் என்பது இன்பமே கலக்காத ஒரு துன்ப உலகம். துயரம் மட்டுமே தலைவிரித்தாடும் ஒரு இருண்ட உலகம். அங்கே உணவில்லை, நீரில்லை, உறக்கமில்லை, சிரிப்பில்லை, சினிமா இல்லை, பாட்டு இல்லை, படுக்கையில்லை – எல்லாம் சோக மயம். திரும்பிய பக்கமெல்லாம் கண்ணீரும் கதறலும் தான். ஆறுதல் சொல்லவோ அரவணைக்கவோ நண்பர்களோ உறவினர்களோ இல்லாத உலகம் அது. இரக்கம் என்பது சிறிதும் இல்லாமல் தண்டிக்க மட்டுமே தெரிந்த நரக ஊழியர்களாகிய கிங்கரர்களை உலகத்தில் காவல் நிலையத்தில் மட்டுமல்ல. எங்குமே பார்க்க முடியாது.

நரக உலகத்தில் ஒரு புதுவிதமான உடல் தரப்படும். மீனுக்கு நீரில் வாழக் கூடிய அமைப்பு கொண்ட நீந்தும் உடலைக் கொடுத்த பகவான், ஒட்டகத்துக்குப் பாலைவனத்தில் வாழ்வதற்கு ஏற்ற வெப்பம் தாங்கும் உடலைக் கொடுத்த பகவான், கழுகுக்கு வானத்தில் பறப்பதற்கேற்ப சிறகுகளைத் தந்த பகவான், நரகத்தில் துன்பத்தை அனுபவிப்பதற்கு ஏற்ற ஒரு சரீரத்தை கொடுக்கிறான். அதன் பெயர் யாதனா சரீரம். அந்த உடலில் கையை வெட்டினால் கை வளரும், காலை வெட்டினால் கால் வளரும். உடனுக்குடனே வளரும். ஏதற்காக வேண்டும்? வெட்டப் படுவதற்காக! அங்கே அகப்பட்டவர்கள் வாணலியில் கொதிக்கும் எண்ணெயில்

பொரிக்கப் படுவார்கள். பொரிந்து வெந்தவுடன் புது சரீரம் ஏற்படும், மறுபடி பொரிக்கப்படுவர். ரம்பத்தால் அறுபடுகிற வர்களும், கழுமரத்தில் ஏற்றப் படுகிற வர்களும், கண்கள் பிடுங்கப்படுகிறவர் களும் கண்ணுக்கெட்டிய தூரம் கோடிக் கணக்கில் பரவிக் கிடப்பார்கள். கதறுகிறவர்களுடைய அவல ஒலி நம் காதுகளைத் துளைத்து இதயத்தைப் பிளக்கும். ஒரு சாவு வீட்டின் கோஷ்டி அழுகைக் குரலையே சகிக்க முடியாத நாம் கோடிக்கணக்கில் அழுகுரல்களை கேட்டுத் துன்புற வேண்டும்.

அங்கே வேதனைப்படுகிறவர்கள் பூமியில் இருக்கிற தம் புதல்வர்களையும் உறவினர்களையும் நோக்கி உதவிக்குக் கூப்பிடுவார்கள். வாய் கிழியக் கத்துவார்கள். ஆனால் அந்தக் குரல் பூமியில் யாருக்கும் கேட்காது, அவர்கள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பார்கள். தாம் பூமியில் வாழ்ந்த பல ஜீவியத்தை எண்ணி நரகில் துன்புறுகிறவன் பலவாறு வருந்திப் புலம்புவான். இங்கே பெருமாள் கருடனுக்கு ஒரு நீண்ட பட்டியலே கொடுக்கிறார் – அப்படிப் புலம்புகிறவ னுடைய வாய் மொழியாக! அதை கீழே தருகிறேன், படித்து பாருங்கள்.

“பூமியில் அரிய மானிட ஜென்மம் எனக்குத் தரப்பட்ட போது அதை வீணடித்தேனே! ஐயோ, என்னைப் போல் மதி கெட்டவன் யார் இருக்க முடியும்? ஆத்மாவைப் பற்றியும் சொர்க்கம், நரகம், ஆகியவற்றை பற்றியும், உபந்யாசம் செய்தவர்களை கேலி செய்தேனே! கடவுள் இல்லை என்றும் நாத்திகம் பேசினேனே! சாதுக்களை எட்டி உதைத்தேனே! தீர்த்த யாத்திரைகள் செய்தவர்களை பரிகசித்தது மல்லாமல் நானும் புனித யாத்திரை மேற் கொள்ளவில்லை; விரதங்கள் இருக்கவில்லை. தண்ணீர்ப் பந்தல் வைக்கவில்லை. கிணறு வெட்டவில்லை; புறம்போக்கு நிலத்தைச் சொந்த நிலம் ஆக்கிக் கொண்டேன்; தானம் செய்யவில்லை. சாத்திரங்களைக் கிழித்தெறிந்தேன்; பள்ளிக்கூடங்கள் கட்டவில்லை. ஆன்மீகச் சொற்பொழிவு களுக்கு ஏற்பாடு செய்யவில்லை. மாறாக இடையூறு செய்தேன். பொய்ப் பத்திரங்கள் எழுதினேன். பிறர் சொத்தைத் தந்திரமாக அபகரித்தேன். உழைப்பவனுக்கு கூலி கொடுப்பதாகக் கூறி ஏமாற்றினேன். யாருக்காக இந்தப் பாவங்களையெல்லாம் செய்தேனோ அவர்கள் இப்போது என் துன்பத்தை வாங்கிக் கொள்கிறார்களா? எனக்கு ஆறுதல் சொல்லக் கூட அவர்கள் அணுகவில்லையே! ஊரைக் கொள்ளை யடித்து உற்றாருக்கு உதவினேன். அந்த உற்றாரும் சுற்றத்தாரும் எனக்கு இந்த நேரம் என்ன வகையில் பயன்படுகிறார்கள்? என் புண்ணுக்கு மருந்து போடக் கூட ஆள் இல்லையே. இவை போன்ற ஆயுதங்களால் இந்த யமகிங்கரர்கள் என்னை அடிக்கும் போது இந்த வேதனையை தான் எப்படிப் பொறுப்பேன்?” என்று நரகில் துன்புறுகிறவன் பலவிதமாகப் புலம்புவான்.

தர்மத்தைப் புறக்கணித்து பெரியோர்களின் வாக்கை மீறி அற நூல்களைத் துச்சமாக மதித்து உலக வாழ்க்கை இன்பம் ஒன்றே பிரதானம் என்ற நோக்கத்தில் வாழ்கிறவர்கள் உங்களில் யாராவது இருக்கிறீர்களா? அப்படி இருந்தால் இந்த நரக தண்டனைகளுக்குத் தயாராக இருங்கள்!